# தண்டபாணி சுவாமிகள் அருளிய திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம் ஏழாவது எழுசீர் விருத்தச் சதகம்


பதிப்பு

**அ. பாத்திமா பர்வீன்** எம்.ஏ.,

நெறியாளர்

**வீ. அரசு**

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்



**தமிழ் இலக்கியத்துறை**

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005.

மே 2006

# தண்டபாணி சுவாமிகள் அருளிய
# திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம்
# ஏழாவது எழுசீர் விருத்தச் சதகம்

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு


பதிப்பு

**அ. பாத்திமா பர்வீன்**

நெறியாளர்

**வீ. அரசு**

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்



**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005.**
**மே 2006**

"சுவடியியல் மற்றும் பதிப்பியல்"
பட்டயப் பேற்றிற்காக
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு எண்:43010507.

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் வீ. அரசு,**
பேராசிரியர் - தலைவர்
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்று வரும் **'சுவடியியல் மற்றும் பதிப்பியல்'** என்னும் பட்டயம் பெறுவதற்காகச் **"தண்டபாணி சுவாமிகள் அருளிய திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம் ஏழாவது எழுசீர் விருத்தச் சதகம்"** என்னும் இப்பதிப்பேட்டினைச் செல்வி **அ. பாத்திமா பர்வீன்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இந்தப் பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

**(பேராசிரியர் வீ. அரசு)**

நாள் :
இடம்: சென்னை -5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**அ. பாத்திமா பர்வீன்,**
முதுகலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்று வரும் **'சுவடியியல் மற்றும் பதிப்பியல்'** நிறைசான்றிதழுக்கான **"தண்டபாணி சுவாமிகள் அருளிய திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம் ஏழாவது எழுசீர் விருத்தச் சதகம்"** என்னும் ஓலைச்சுவடி என் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

பதிப்பாளர்,

**(அ. பாத்திமா பர்வீன்)**

நாள் :
இடம்: சென்னை -5.

# நன்றியுரை

சுவடியியல் பட்டய வகுப்பில் பயில வாய்ப்புத் தந்து ஏழாவது எழுசீர் விருத்தச் சதகத்தைப் பதிப்பிக்க நெறிப்படுத்திய சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத்தலைவர் **பேராசிரியர் வீ. அரசு** அவர்களுக்கும், சுவடியை எம்முறையில் படிக்க, பதிப்பிக்க வேண்டுமெனப் பயிற்சியளித்த **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கும் எனது நன்றியை முதலில் உரித்தாக்குகிறேன்.

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்ட ஆய்வேட்டிற்காகச் சுவடி அளித்து உதவிய கோயமுத்தூர் சிரவையாதீனம் **தவத்திரு. குமரகுருபசுவாமி** அவர்களுக்கும், சுவடியிலுள்ள பாடல்களுக்குப் பதப்பிரிப்பு மற்றும் குறிப்பு எழுதிக் கொடுத்தும் உதவி புரிந்த அகராதித் துறையில் பணியாற்றும் **ப.வெ. நாகராசன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

என் முன்னேற்றத்திற்குப் பல்வேறு வகையிலும் உறுதுணையாக இருந்துவரும் எனது பெற்றோர் **பா. முகமது அலி, அ. மெகராஜ் பீ** அவர்களுக்கும், எனது சகோதரர்கள் **அ. முகமது ரபி, அ. முகமது சலீம்** அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

**அ. பாத்திமா பர்வீன்**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | VII |
| பதிப்புரை | VIII - XII |
| திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம் - ஏழாவது எழுசீர் விருத்தச் சதகம் நூல் | 1-50 |
| பின்னிணைப்பு | |
| 1. செய்யுள் முதற்குறிப்பு | 51-59 |
| 2. துணை நூற்பட்டியல் | 60 |

# பதிப்புரை

பதிப்பு முன்னோடிகளாக உ.வே.சா., சி.வை.தா., வையாபுரிப்பிள்ளை போன்றோர் திகழ்கின்றனர். இப்பதிப்பு பணிகள் மேலும் தொடரும் வகையில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை 'சுவடியியல்' மற்றும் 'பதிப்பியல்' பட்டய வகுப்பு நடத்துவது சிறப்பிற்குரியதாகும்.

**பதிகம்**

பத்து செய்யுள்களாலான ஒரு சிறுபிரபந்தம் பதிகம் எனப்பெறும். இவை இசையோடும் பாடிக்கூடியன. காரைக்காலம்மையாரும், திருஞானசம்பந்தரும் காட்டிய வழியில் பல்லாயிரக்கணக்கான பக்திப் பதிகங்கள் தமிழில் எழுந்துள்ளன. தலச்சிறப்பையும், இறைவன் சிறப்பையும், பண்ணோடு எடுத்துக் கூறுவதில் இவ்வகை இலக்கியம் மக்களிடையே சிறப்பிடம் பெற்றதால் அடியார்கள் இதை மிகவும் போற்றினர். அவ்வகையில் அமைந்தவை திருவாமாத்தூர் பதிகச்சதகம்.

**சதகம்**

பத்துப் பத்தாக நூறு பாடல்கள் அமைந்த நூல்கள் பல தமிழில் உண்டு. சங்க காலத்தில் பதிற்றுப்பத்து என்னும் நூல்

அவ்வாறே அமைந்தது. பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்ற நூலும் அவ்வாறே அமைந்ததே ஆகும். பத்துப்பத்தாக அமையாமல் மொத்தமாக நூறு பாட்டுப்பாடி அமைப்பதும் உண்டு. அது சதகம் என்னும் வடச்சொல்லால் குறிக்கப்படும்.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் சிவபெருமானைப் பாடிய பாடல்களுள் ஒரு பகுதி 'திருச்சதகம்' என்று பெயர்பெறும். இதுவே சதக நூலின் முன்னோடியாக கருதப்படுகிறது. பிற்காலத்தில் தெய்வங்களையும், வள்ளல்களையும், சிற்றரசர்களையும் சிறப்பித்துப் பாடப்பட்ட சதகங்கள் பல உண்டு. 17, 18, 19-ம் நூற்றாண்டுகளில் சதகங்கள் இயற்றுவதில் ஆர்வம் மிகுதியாக காணப்பட்டது.

தமிழ்ச் செய்யுள்களின் நடைப் படிப்படியாக எளிமைபெற்று வளர்ந்த வளர்ச்சியை சதக நூல்களில் காணலாம்.

## நூலாசிரியர் குறிப்பு

மிகச்சிறந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர் தண்டபாணி சுவாமிகள். தமிழிலக்கிய வகையிலான மிகுதியான பாடல்களைப் பாடியும், அவற்றை தம் கைப்பட ஓலைச்சுவடியில் எழுதி வைத்தும் சிறப்பித்த ஒரே புலவர் இவர். திருநெல்வேலியில் 22-11-1839 அன்று அவதரித்தார். செந்தினாயகம் பிள்ளைக்கும்,

பேச்சி முத்துக்கும் மகவாகப் பிறந்த இவருடைய இயற்பெயர் சங்கரலிங்கம். 6-வது வயதில் தந்தையை இழந்தார். இளமையிலேயே கவிபாடும் திறம்பெற்ற இவர் இளமையிலேயே துறவுக்கோலம் பூண்டவர். முருக வழிபாடும், வேல் வழிபாடும் மேற்கொண்டிருந்ததாலும் ஆண்டியின் கோலம் பூண்டிருந்ததாலும் இவர் 'முருகதாசர்' என்றும் தண்டபாணி சுவாமிகள் என்றும் எல்லோராலும் அழைக்கப்பெற்றார்.

நால்வரைப் போன்று தலங்கள் தோறும் சென்று பாடும் இயல்பினைக் கொண்ட இவர், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவிகளை புனைவதிலும் வல்லவர். இலக்கணம், இலக்கியம் எனப் பல வகைகளில் இவர் பல்லாயிரக்கணக்கான பாடல்களை இயற்றியுள்ளார். அனலிலும், புனலிலும் போனவை போக இப்பொழுது சுமார் 50,000 பாடல்கள் ஓலைச் சுவடிகளிலேயே கோயமுத்தூரையடுத்த சிரவையாதீனத்தில் பாதுகாக்கப்படுகின்றன..

சமயவாதங்கள் என்னும் வேறுபாட்டிற்கு முற்றிலும் அப்பாற்பட்டவர் இவர். இறைவன் ஒருவனே என்ற கொள்கையை அழுத்தமாக வலியுறுத்தி, பல்வேறு உருவங்களிலும், பெயர்களுடனும் அந்த ஒரு இறைவனை வழிபடுவதில் சமயப் பூசல் எழுதல் கூடாது என்பதை அறிவுறுத்தியவர். திருமால், சிவன், முருகன், அம்பிகை, கணபதி,

சூரியன் என எல்லாக் கடவுளர் மீதும் இவர் பாடியுள்ள பாடல்கள் சமய சமரச நிலையை வலியுறுத்தக் காணலாம்.

தன் வரலாற்றைத் தானே தெரிவிக்கும் புதுமையை முதன் முறையாகச் செய்த பெருமை இவருக்கு உண்டு. தம் ஆயுட்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகள், சென்ற தலங்கள், பாடிய பாடல்கள், பெற்ற அனுபவங்கள் என எல்லாவற்றையும் விளக்கி இவர் "குருபரதத்துவம்" என்னும் பெயரில் 1240 விருத்தங்களால் ஒரு தனிநூலாக இயற்றியுள்ளார். இந்நூலின் மூலம் நாம் பல வரலாற்றுச் செய்திகளை அறிய முடியும்.

5-7-1898 ஆம் ஆண்டில் சிவப்பேறு எய்தினார்.

**நூல் அமைப்பு**

பத்துச் சதகம் கொண்ட திருவாமாத்தூர்ப் பதிகச் சதகத்தில் ஏழாவது சதகம் மட்டுமே இங்குப் பதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இச்சதகங்கள் இதுவரை பதிப்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏழாவது சதக தொடக்கத்தில் "இந்த நாளிலென் கண்ணெதிர்" என முதல் பாடல் அமைந்து இறுதியில் "நமர்மாதை வளநகரின் மாதேவனே" என முடிகின்றது.

ஏழாவது எழுசீர் விருத்தச் சதகத்தில் முதல் 25 பாடல்கள் அறுசீர் விருத்த யாப்பிலும், அடுத்த 25- பாடல்கள் எழுசீர்

விருத்த யாப்பிலும், அடுத்த 50 பாடல்கள் அறுசீர் விருத்த யாப்பிலும் அமைந்துள்ளது. ஒவ்வொரு 25 பாடல்களுக்கடுத்தும் வேறு என்று குறிப்பிட்டு யாப்பு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இந்நூலின் கருப்பொருள் திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை போற்றி பாடப்பட்டுள்ளது.

"பதிகச் சதகம்" பத்து அலகுகளால் இயன்ற இப்பனுவல் நூலாசிரியர் படைத்துக்கொண்ட ஒரு புதிய சிற்றிலக்கிய வகை.

## சுவடி அமைப்பு

திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம் – 'ஏழாவது எழுசீர் விருத்த சதகம்' என்னும் இந்த ஓலைச்சுவடி ஒன்பது சுவடிகளில் நூறு பாடல்கள் அமைய சுவடியின் இரண்டு பக்கத்திலும் எழுதப்பட்டுள்ளது. ஒரு பக்கத்திற்கு 11 - அடிகள் கொண்டு பாடல்கள் அமைந்துள்ளன. இச்சுவடி 44x3.5 செ.மீ. என்ற அளவினை உடையது.

ஓலைச்சுவடி சேதமின்றி அமைந்துள்ளது. சுவடியின் ஒவ்வொரு பக்கத்திலும் சுவடி எண்ணும் தமிழில் அமைந்துள்ளன. எழுத்துக்கள் இடைவெளி இன்றித் தொடர்ச்சியாக அமைந்துள்ளன. மெய்யெழுத்துக்கள் வரும் இடங்களிலெல்லாம் மேலே புள்ளியில்லாமல் அமைந்துள்ளது.

# திருவாமாத்தூர் பதிகச் சதகம்
## ஏழாவது எழுசீர் விருத்தச் சதகம்

### அறுசீர் விருத்தம்

இந்த நாளிலென் கண்ணெதிர்
　　யான்கரு திரும்படி உருக்காட்டி
எந்த நாளினும் கொலைபுலை
　　தீதெனும் இயற்கைமா நிலத்துள்ள
மைந்தர் யாவரும் அறிதரத்
　　திருத்தில்நின் மகிமைகுன் றிடுங்கொல்லோ
சந்த வான்பொழில் சூழுமா
　　மாதையூர் தனிலெமக் கினியோனே. 1

வெயில்நி லாஎறித் திடும்புவ
　　னியில்ஒரு விரகனா யிறும்உன்னைக்
கயிலை மால்வரை மிசைகொலு
　　விருந்தவர் கருதுந னிருக்கானோ
வயிலன் னோற்களித் தரக்கரா
　　தியர்களை அழித்திட லாகாதோ?
மயில்கு லாம்பொழில் சூழ்தரு
　　மாதையில் வதிதரு முதியோனே! 2

உன்னை எள்ளினும் எள்ளுவன்

உனதருட் குரிமையுற் றவர்தஞ்சீர்

தன்னை எள்ளிடேன் என்னைநீ

இகழினந் தழுவினுஞ் சமந்தான்காண்

முன்னை நாட்குண முழுதுநீ

இழந்தமை முன்னிநொந் துளனந்தோ

தென்னை வார்பொழின் மாதையூர்க்

கோயிலிற் றினம்வளர் செய்யோனே! 3

அன்று புக்கொளி யூர்த்தடத்

திடங்குண் டருண்மக வினுந்தாழ்வே

யின்று போம்வட லூரனென்

குதியெனில் யானுனை யஞ்சாமற்

பொன்றும் வானவர் தம்மினுந்

தாழ்வெனப் புகன்றிடத் துணிவேன்காண்

குன்று போன்முலைச் சிவையொடு

மாதையிற் குடிகொளுங் கோமானே.! 4

நித்த மாந்துதி பாடினர்
    பலரென நிலவிய புலவோர்நீ
யேத்த மும்பல சித்தியும்
    வழங்கினை யர்முன தருட்பாங்கை
இத்தரைப் புறச்சமயர் கள்இகழ்ந்
    திடலியா னுனிற்பொ றுக்கில்லேன்
மத்த மும்புனை வாய்வள
    மாதையில் மதியுடன் விரவானே! 5

வான நாடரு மதித்திடுந்
    திருவருள் வலியுடைப் புலவோன்வந்து
இன்று யாவரும் நடுங்குறத்
    தகுந்திறம் இயற்றிட லெந்நாளோ
கான நான்மறை பசுக்கொலை
    சொலுமெனுங் கடையரு மிகலாமோ
தேன ளாவிய மலர்ப்பொழின்
    மாதையிற் சிவையொடு திகழ்வானே! 6

அன்று நின்விழி யளித்தசே

யென்னுடன் அறைந்தசொற் படிசெய்தற்கு

இன்று காறுநீ இரங்கிலை

யீதுனக் கியல்பெனத் தகுங்கொல்லோ

கொன்று தின்பவர்க் கரசளித்

துள்ளதீக் குணமெநாள் யொழிவாயோ?

நன்று மிக்குறு மாதைமா

நகர்நடு நாடொறும் வளர்வானே! 7

பட்ட வர்த்தனர் மகுடவர்த்

தனர்எலாம் பாழ்படு நெடும்பாரிந்

சுட்ட போர்க்கருந் தோன்முடிப்

புரவலர் துலங்கிட வைத்தாய்நின்

இட்டம் ஈதெனில் நின்கதி

அறிஞருக் கெரிநர கிணையாங்காண்

அ[illegible]ர்த்தியு மாயணி

மாதையில் அருளுருக் கொண்டானே! 8

மாய வித்தையும் அணிகளும்

மாழையும் மகளிரும் முதலியாவும்ஞ

மேய நல்கினு மென்றமிழ்

விளங்குமட் டித்தலத் துறுங்கொல்லோ?

ஈய வல்லரிற் பெரியவ

னெனும்புகழ் இழந்திவ றேனுற்றாய்?

சேய மால்வரை யேயென

மாதையிற் சீருருக் கொள்வானே! 9

முதலை யுண்டசேய் வந்ததே

முதலிய முதுபுகழ் மொழிதோறும்

பதக ரெள்ளிடற் கேட்டுமோர்

அணுத்துணை பட்சமற் றிருக்கின்றாய்

அதனை யோர்ந்திடி னின்னுறவு

ஒருபொரு ளெனக்கொளுத் தகுங்கொல்லோ?

உதக வேணியப் பா!திரு

மாதையில் உமையுட னுறைவானே! 10

என்பு பெண்ணுரு வாயின

தாதிய இசைத்திடி லிகழ்ந்தார்கும்

வன்பு ளார்மணி நாவறுத்

திடும்பெரு வலியெனக் கருள்வாயேல்

அன்பு சற்றுடை யார்க்கும்

வேண்டிய பயனளித் துனையடைவேன்காண்

முன்பு கழ்ந்துபற் பலருய

மாதையின் முளைத்தெழுந் தவிர்வானே! 11

பிள்ளை வெள்ளன மனையமென்

னடையினர் பிரமையிற் எழல்வேற்குத்

கொள்ளை ஞானமுஞ் சித்தியும்

நல்கிடிற் குறித்துனை மறிப்போரார்

கள்ளை நேர்மொழிப் பரவைபாற்

றூதுசெல் காற்றடுத் தவருண்டோ?

வள்ளை வார்குழைச் சிவையுடன்

மாதையின் மழவிடை யுகைப்போனே! 12

கால முங்கொடுங் கன்மமுங்

கருதுபு கலங்கிடுஞ் சிறுபுந்திப்

பாலர் தம்மொடு நானுமிங்

ஙனந்துயர்ப் படும்படி விடலாமோ?

நீல கண்டமும் நெஞ்சமன்

மரணமும் நினைப்பவர்க் கெளியோனா

ஆல நீழலுற் றாய்!வள

மாதையில் அழகிய பெருமானே ! 13

பங்க யாதனப் பிரமனும்

மாயனும் பணிதகை பகர்ந்தார்க்கு

துங்க நல்குநீ யிருமகார்ப்

பெறுநலஞ் சொலுமெனக் கருளாயோ?

சங்க மார்தரு செவியொரு

பத்துடைச் சங்கரர் தழலேந்தீ!

செங்கண் வெள்விடைக் கொடிதிகழ்

மாதையிற் றினந்தினம் வளர்வானே! 14

சடில மட்டுள சின்னமுற்

றவிர்தரு சைவதா பதர்தாமும்

படிறு மிக்குறு சமணநூற்

பொருள்உணர் பாவமும் பொறுத்தாயே

மடிவி லார்களிற் றலைமைபெற்

றநுதினம் மாதைமா நகர்வாழ்வாய்

கடிய றாமலர்க் கடுக்கையுந்

தும்மையுங் கங்கையும் புனைவானே! 15

பால றாமழ வாயுடைக்

குருபரன் பதிகமுற் றுறுந்தோறுஞ்

சால வோதுசொற் றணந்திகல்

பின்செல் புன்சைவ ரிற்றாழ்வேனோ

கால காலனென் றுணர்ந்துளார்

மனந்தொறுங் கருணைபெய் முகில்போல்வாய்!

ஏல வார்குழ லாளொடும்

மாதையில் இனிதெழுந் தருள்வானே! 16

உன்னை நம்பிய மால்முத

லோர்களை யுருத்திகழ்ந் துலகாளும்

மன்னை யாதியர்க் கிதஞ்சொல்

புன்கவி ஞர்தம்மனக் களிப்பழியாதோ?

அன்னை தந்தையுங் குரவனும்

இன்றிஅ நாதியாய் ஆமாதை

தன்னை யாள்சிவ னே!பல

தெய்வமுந் தானெனத் தழைத்தோனே! 17

பரவ சப்படு மெய்யடி

யாருணர் பரத்துவம் உணராராய்

அரவ நேர்சினஞ் செயுமிளம்

புலவர் வீறழிப் பவன்அவிரானோ?

கரவ றாமனத் தினர்அறி

வரும்புகழ்க் கண்ணுதற் பெருமானா

இரவ லர்க்கர சென்வள

மாதையி னிடந்திக ழிறையோனே! 18

தவரும் வேதியர் தாமமிவ்

வுலகறி தரத்தகாத் தசையுண்டுண்டு

உவகை கூடர் பெருங்கொடு

மையுங் கண்டுநான் உறுகணுற்றிடலாமோ?

சிவசி வாவர கரமகா

தேவனே! சிந்துரத் தள்போர்த்த

பவள மேனியப் பா!முது

மாதையம் பதிநடுப் பதிந்தோனே! 19

வேட ருங்கடைக் குலத்தருங்

கொலைபுலை விடத்தடுத் தலும்வேட்டேன்

பாடல் வேதியர் களும்நிணம்

தினும்பிழை பார்த்தழச் செயலேனோ?

கூட லம்பதித் தெருவினில்

விற்குமுன் கொடுநடக் கவும்நாணாய்!

மாட மேன்மதி தவழ்தர

முகில்பொதி மாதையில் வசிப்போனே! 20

வேள்வி யிற்கொலை செயும்பிழை

விதித்ததோர் விதிதலை பறிபோதற்

கேள்வி யுற்றிடா ரின்னமும்

அதுசெயற் கெடுக்கவல் லவனாரோ?

வாள்வி டுங்கண் மூன்றொடு

வளர்செம் மணிவரை புரைமாதேவா!

தாள்வி ழைந்துளார் பலர்தொழ

மாதையிற் றழைத்தசட் குணத்தானே! 21

வேத நூற்கருத் துணர்ந்திடாது

ஊனொடு வெறிப்புனற் பொருள்சொன்ன

பாத கன்றன் நாவினிற்

புழுச்சொரிந் தமெய்படி முழுதுணராதோ?

சீத வாரிசப் பிரமர்

தம்தலைவ டஞ்செறித ருதிருமார்பின்

மாத வப்பெருங் கூர்மமும்

புனைந்தெழின் மாதையில் வாழ்வானே! 22

அங்கி யிற்றசை யிடச்சொனான்

நாவிலுண் டாகிய புழுவெல்லாம்

மங்கி டத்தவ முயன்றுயுந்

தலத்திலவ் வன்பிழை மிகலாமோ?

கொங்கி யன்றபொற் கடுக்கையும்

ஆத்தியுங் குலவிய கோடீரா!

சங்கி னந்தவழ் வயன்மலி

மாதையிற் றனிவிடை யுகைப்போனே! 23

சட்ட நான்மறைச் சுருதியில்

அவுணரே தசையரக் குணுந்தீங்கு

பட்ட பாழ்விதி கலந்தனர்

எனச்சொலும் பாவலர்ப் பாரேனோ?

நட்ட மாடிய நாயக

னேமுதன் ஞாலமா ருயிரீறாம்

அட்ட மூர்த்தியும் ஆனவ

னேபொழி லணிகொண் மாதையளானே! 24

ஐங்க ரத்தனிக் கடவுளுங்
        குமரனும் அனையசீர் பெறவேண்டி
இங்க ரற்றுமென் றனக்கணுத்
        துணையருள் ஈயவும் இசையாயோ?
சங்க ரப்பெயர்த் தாணுவே
        வேணுவில் தனியுரு வமுங்கொண்டாய்
வெங்க ரக்குறி களத்துளாய்
        மாதையென் வியன்பதி மேயானே! 25

**எழுசீர் விருத்தம்:**

கஞ்சநாள் மலரில் பிரமனும் மாலும்
        காண்பரி தாயநின் கழற்சீர்
நெஞ்சக மதனாற் கருதிடுங் தமியேன்
        நெடிதுயிர்த் தழச்செயல் முறையோ?
பஞ்சபா தகப்புன் சமயவா திகள்வாய்ப்
        பழிப்பினும் உவப்புறும் பரமா!
நஞ்சமும் அமுதாம் எனகொள் வாய்மாதை
        நகருடைக் கடவுள்நா யகனே! 26

இன்னலெத் தனையோ வித்ததி னிலயின்று
ஈண்டிடைந் துழலெளி யனேற்கிரங்கிப்
பொன்னவா வதனை முதலினிற் றணந்து
புனிதமா தவப்பய னருள்வாய்;
பன்னகா திபுனும் பகர்ந்திடற் கரிய
பல்புகழ் மாதைய மதியில்
அன்னமென் நடைப்பார்ப் பதியுடன் அமரும்
ஆண்டநா யகப்பெரு மானே! 27

நாணுளன் எனக்காம் பணிசெயத் தக்க
நரரில் ரெனநவில் குதியேல்
ஊனுணு மவர்க்கும் அரசுட னாண்மை
உதவுபாழ் கடவுள்வே றுளனோ?
தேனுவா திப்பல் பசுக்களுந் திரண்டு
தினந்தொழத் திகழுமா மாத்தூர்க்
கோனுமெய்க் குருவுத் தெய்வமு மாயோர்
குமரியிற் குலவுகொள் கையனே! 28

புண்ணியம் வெறுத்துப் பாவமே லுவகைப்
பொலிவுளான் போன்றனை பொருவில்
திண்ணிமை யுறலாற் றீங்குநீ செயினின்
திருவுளஞ் சிரித்திக ழாதோ?
கண்ணிமை அளவில் அண்டகோ டியெலாம்
கரந்தளித் தருளவும் வல்லாய்
பெண்ணியல் பாகம் பிறங்குமா தேவா!
பீடுசான் மாதையூர்ப் பிரானே! 29

செங்கனல் புனலென் றுளஇரு பொருளும்
சிறியனே னிடங்கவா் தமிழ்முற்று
இங்கடி யவா்முற் றறிதர மீண்டால்
அலதியா னின்புறேன் கண்டாய்;
பிங்கலச் சிலைகைக் கொடுபுவித் தோ்மேல்
பிரமன்நா மறைப்பாி உகைப்ப
அங்கடைந் தவுணா் புரமெரித் திட்டாடய்
அருண்மலி மாதையா திபனே! 30

இருவகைக் கனவிற் காண்டகு நலத்தூடு
யாதுமெய் படாதொழிந் திடல்நின்
அருள்வசத் தினவே யாவையு மென்னும்
அம்மொழி செப்படுங் கொல்லோ
சருவசத் தாகிச் சித்தமாய்ப் பழுதில்
சமரசா னந்தமும் ஆவாய்!
மருமலர்ச் சோலை வளைதரு திருவார்
மாதைமா நகர்வளர் வானே! 31

பூதநா யகனென் றிறைஞ்சினார் தமக்கும்
பொருவில்வீ டுதவினை போன்றா
நாதனீ யெனப்போற் றிசைக்குமென் றனக்கா
நலஞ்சிறி தருளிடாய் கொல்லோ?
வேதவே தாந்த விமலசிற் குருவா
வியன்கலா லடியில்வீற் றிருந்தாய்!
மாதமத் தனையும் விழவறா மாதை
வளநகர் புரக்கும் வானவனே! 32

அஞ்சனக் கருங்கண் மடமினார் மோகம்

ஆம்பிணி யால்அல மரும்என்

நெஞ்சகத் திருக்கா லுமையொடு விடைமேல்

நீவரு நிசம்பொயாய் விடுமோ?

குஞ்சரக் களிற்றீ ருரிவையுட் புதைவாய்!

குளிர்பொழின் மாதையிற் குலவு

செஞ்சரோ கருக்கா டனையமா மேனிச்

சிவா!பெருஞ் சித்தர்சே கரனே! 33

வெண்டகைப் பிறைக்கோ டொன்றுளான் முதுசூர்

வேரறக் களைந்தவை வேலான்

செண்டணி கரத்தான் முதலின ருடனிச்

சிறியனேன் றிகழும் நாள்உளதோ

தண்டமுஞ் சூலப் படையும்வைத் தொருமா

தவச்சிசு மேற்சமர் துவக்கும்

சண்டனைத் தடிந்த தாளுளாய் மாதைத்

தலத்துறை சகுணதே சிகனே! 34

கொம்புடை யனவுங் கொன்றுவெந் தருந்துங்
கொடியவர் குழாம்படு களத்துச்
செம்புன லாறுதிரைக் கடல்வயிற்றிற்
சென்றுழக் கிடுந்தின மெதுவோ?
கம்புலாஞ் செவியோர் பத்துடைச் சிவனே!
கலக்கமில் கருணைவா ரதியே!
நம்புவார்க் கெளியாய்! நலமிகு மாதை
நகர்வளர் ஆண்டநா யகனே! 35

ஏட்டின்மை யிடற்குச் சமுத்திரப் புனல்முற்று
இயைதரு பலபல கோடி
பாட்டினம் பாடி யேனுமூன் அருந்தும்
பதிதர்வேர் அறுப்பவ னெவனோ?
கோட்டிள மதியம் புனைதரு சடைமேல்
கொக்கின் வெற்றிற கிடக்கூசாய்
மாட்டின்மேல் மவைவி மகவுடன் ஏறி
மாதையூர் வலவரு வானே! 36

அந்தநா ளௌவை நாவினில் வசித்த
அருந்தமிழ்க் கலைமகள் அன்பால்
இந்தநா ளொருபா வலன்றனா வகத்தில்
இருந்திடி லிகழுயு மன்றோ?
கந்தவார் குழற்பார்ப் பதிமண வாளா!
கனற்கணாற் கந்தனைப் பயந்தாய்
பைந்தகைத் தோகை மயினடம் பயில்சீர்
படர்பொழின் மாதையூர் பரனே! 37

பாடல்வல் லபத்துக் கலைமிஞர் பலரும்
பகர்ந்தவா றக்கணம் முடித்திட்டு
ஆடலில் வலியா ராமவர் சிலரும்
அமைந்துளர் என்றிட லாமோ?
நீடரிக் கருங்கண் மாலைமகள் பாகா!
நீலகண் டேச! மா தேவா!
கோடலில் வளமை குலவுமா மாத்தூர்க்
கொற்றவா! குன்றவில் லவனே! 38

வண்ணவான் கவியுந் தொடுத்தெனா வகத்தில்
வாழ்கலை வாணியை மயிலோன்
எண்ணலும் பார்த்தே னிசைத்தவா றுடனே
இயற்றிடக் காண்கிலே னந்தோ!
பண்ணவர் எலும்புஞ் சாம்பலும் புனைவாய்!
பனவர்தந் தலைவடம் பரிப்பாய்!
கண்ணணி வார்க்குக் காவலீந் தருள்வாள்!
கவின்செய்மா தையினிகழ் சிவனே! 39

ஆடிய மயிலோன் அறைந்தசொற் பலிதம்
அதுகுறித் துன்னரு கடைந்தேன்
பாடிய படியே பலிதமீந் தருளிப்
பார்முழு துய்வுறப் பார்ப்பாய்!
தேடிய நெடுமா லயனறி வரிதாத்
திகழொரு சிலம்புரு வானாய்!
பேடியன் றுவப்பக் கணையளித் தாண்டாய்!
பொரும்புகழ் மாதையூர்ப் பிரானே! 40

கனலெதிர் பசுக்கொன் றுண்ணல்வேட் டாற்கும்
    கனகமீந் தருளிய கருணை
அனவா தமுமெவ் வுயிருநின் வடிவே
    யாமெனு மெனக்கிரங் காதோ?
பனகபூ டணம்பூண் டாடிய பரமா!
    பச்சிளங் கிள்ளையன் னாளாம்
புனல்வடி வினளாம் புணர்மண வாளா!
    பொருவின்மா தையிற்பொலி வானே! 41

ஆனினம் வதைப்பா ருவப்புறா நிமித்தம்
    அருட்பெ ரும்புலந் தவரு
நானிலத் தில்லா தொழித்தநீ யுணர்ந்து
    நவிலவென் றன்னையேன் படைத்தாய்?
வேனில்வேள் பொடிய விழித்தகண் ணுதற்சீர்
    வேதியா விண்ணுளார் வெந்த
பானிறப் பொடிபோர்த் தணிதிகழ் மாதைப்
    பதிவளர் பழங்கிழ வோனே! 42

பதுமநாண் மலரிற் பிரமன்மான் முதலாம்
பலருநின் படிவமாப் பார்க்கு
பொதுநிலை யமைந்த பின்மை துணராய்
புல்லருக் கொல்குறிப் பேமோ
விதுவணி சடிலவி மலனே சிரிப்பால்
வெவ்வினைத் தகுவரு ரெரித்தாய்!
மதுமலர்ச் சோலை வளைதரு மாதை
வளநகர்க் கோயில்வாழ் வானே! 43

மந்தரக் குரிநேர் முலைமினார் மோக
வலையிடை மாழ்கினும் மயிலூர்
கந்தனைப் புரையுந் திருவருட் பேறுங்
கருதிநொந் தேனெனைக் கழியேல்!
சுந்தரற் கிருக்காற் றூதுமுன் போனாய்!
சுடர்விழிக் துவர்க்கிரி யனையாய்!
செந்தமி ழாமாத் தூருடை யானே!
சிவையொரு கூறுறுந் தேவே! 44

அக்கினி யனையா னொருவன்வே லேந்தி

ஆடதி லேறிவந் ததிலது

உக்கிரர் சமர்செய் தூனுணு மவர்வேர்

ஒருங்கறுத் திடுந்தின முளதோ?

சுக்கிரன் மொழிகேட் பவர்க்கும் வேண் டியசீர்

தொகுத்தளித் திடுந்தகை தொலையாய்!

திக்கினம் முழுதுங் கரங்களா மிறைவா!

திருவளர் மாதைவே தியனே! 45

சென்றுசென் றென்றந் திறம்பகந் திட்டான்

றில்லையம் பலத்தினின் செயலால்

அன்றுசோத் தியுமருள் வளர்ப்பதற் கீடு

அன்றெனும் அடியனேற் கருளாய்!

கொன்றுதின் கில்லார்க் கெளியவா னவனே

குளிர்பொழின் மாதையிற் குடிகொண்டு

என்றுமெண் ணரும்பே ராடல்செய் வானே!

இகபர மதித்தபே நிறையே! 46

உன்னருள் பெற்றார் களிற்சில ரிறந்தார்
உடலுடன் மீளலுஞ் செய்தர்
என்னவுங் கேட்டே னிரக்கம்நீ ரலகிற்கு
இளைந்திட வேன்செய்தில் லாரோ?
அன்னவா கனத்துப் பிரமர்தந் தலையில்
அமுதிரந் தருந்திய அமலா!
தென்னவன் றூதர் கனவினு நினையாச்
சீர்திகழ் மாதைவை திகனே! 47

அறங்களிற் பெரிதோ ருயிர்வதைத் துடலூன்
அருந்திடா ததுவெனத் தெரியார்
பிறங்கலொப் பாய பொருள் பெறினும்
பிழையெனக் கருதெனைப் பேணாய்;
மறங்கலுழ் கூற்றோர் மாணிதன் நிமித்தம்
மடிந்திடக் கழல்கொடு வதைத்தாய்!
உறங்கலோர் காலும் மருவிடாய் மாதை
ஊருளாய் ஒப்பிலுத் தமனே! 48

இவ்வுல கிந்நா ணிகழ்தகை காண்டற்கு
என்மனம் அருவரூப் பதனாற்
செவ்விணர் வுறுமோர் தேசிகன் றோன்றித்
திருத்திடற் கண்டுயச் செய்வாய்
அவ்வுடன் உவ்வும் மவ்வுமொன் றாயல
அக்கரம் அனையவா மாத்தூர்
ஒவ்வுமற் றோரு ரின்றிய மேம்பாடு
உறும்படி யொளிருமொள் ளியனே! 49

எண்ணிய வெண்ணப் படிவிளை யாடல்
இயற்றலா லிகபரங் கசந்து
திண்ணியர் தொழுநின் றிருவடி புகுஞ்சீர்
சிறியனேற் கருள்வையோ? தெரியேன்;
பண்ணியன் மொழியாள் பங்குடை யொருவா!
பகட்டுமா முகவனுங் குகனும்
நண்ணிய தந்தாய்! நளிர்பொழின் மாதை
நகர்ப்பெருங் கோயினா யகனே! 50

**அறுசீர் விருத்தம்;**

நங்கைய ரிற்றலை யாகிய
சீர்பெறு நாரணி யுடன்வந்தன்று
அங்கையி னீறுகொ டுத்தும்
வாறெனை அலமா விடலாமே?
செங்கையின் மான்மழு வைத்துநி
லாவிய சிவசிவ மாதேவா
மங்கையர் மேடைதொ றாடல்
குலாவெழில் மாதைவ ரோதயனே! 51

சூதைநி கர்த்தமு லைச்சியர்
ஆசைதொ டர்ந்துவ ருத்தவதாற்
பேதையர் தாமுமி கழ்ந்திட
நொந்துபி ணங்குவ தென்றொழிவேன்?
காதைய னந்தம்வி ளைத்தவ
னே! திகழ் கண்ணுதல் விண்ணவனே!
மாதைந கர்க்கொரு தாரக
மாகிவ யங்கிய வானவனே! 52

எண்ணிய வண்ணமெ லாம்விளை

யாடிநின் இருபத மலர்சேரும்

புண்ணிய மெற்கிலை யேனும் அ

வாறுபொ ருத்தவ லாய்அலையோ?

தண்ணியல் கங்கையு டன்சிறு

திங்கள்ச டாடவி யிற்புனையுங்

கண்ணிய னேவா மாதையின்

மேவிய காரண புங்கவனே! 53

கற்பக மேநிகர் கைக்கொடை

யாளர்க லிப்பட யாதுநல்கா

அற்பர்பொ ருட்குவை யாதிஎய்

தச்செய நீதியெ நாளொழிவாய்

தற்பத தொம்பத மென்றுடி

ரிப்பரி தாநிகழ் தத்துவமாஞ்

சிற்பர னேயெழின் மாதையின்

மேயசி வாசெக தீசுரனே! 54

செங்கண்மு குந்தன்மு தற்பகர்

தேவர்செ ருக்கழி யும்படிஅன்று

அங்கணி லத்தொர்து ரும்பைந

டுங்கன மானதி நாளிளலையோ?

சங்கர சம்புசு யம்புச

தாசிவ சாம்பம யேசதமிழ்

பொங்கமி கப்பெறு மாதையின்

மேயபு ராதன பூரணனே! 55

போதக னுங்குரு தேசிக

னும்பரி பூரண நாதனுநீ

யாதல றிந்தும றிந்தில

ரென்னஅ முங்கலு றாதருள்வாய்;

சீதள சந்திர னைச்சடை

மீதுசெ றித்தெழின் மாதையினில்

காதள வோடிய கண்ணித

னோடுக லந்தமர் கண்ணுதலே! 56

வானக முற்றவர் தம்பெரு

வாழ்வினும் வாஞ்சைகொ ளாமுனிவோர்

ஈனர்க ருங்குடை நீழலி

லுற்றிடை யரவன மென்றருள்வாய்

போனக மென்றுவி டங்கொண்ம

யேசபு ராதன புங்கவ! முத்

தானநெ டுங்களி றோலிடு

மாதைத னிற்றிகழ் சங்கரனே! 57

உள்ளன வேபக ராமலி

லாதன வோதலு றும்புலமைக்

கள்ளரெ னைப்பழி யாமலு

னாதுக டைக்கண்அ ருட்பொழிவாய்;

தெள்ளரு விப்பல குன்றுதொ

றாடிய சேரியவிடுத் தெனையீரத்து

அள்ளல்வ யற்றிரு மாதையில்

வைத்தினி தாளுமொ ரைம்முகனே! 58

கார்கட லுண்டுவி டுத்தவன்

ஆதியர் கைக்கொளும் வாழ்வினுமிக்கு

ஏர்கவி னுஞ்சில பேறுமெனக்

கினிதீ யநினைத் துளையோ?

வார்கழ லொன்றுகொ டன்றடல்

அந்தகன் மாயவ தைதபெருஞ்

சீர்கரு தன்பர்ப ரரவிய

மாதைசெ யம்பெற நின்றவனே! 59

கும்பமு னிக்கரு ளுங்குகன்

என்னொடு கூறிய வாறுசெயாது

உம்பரு மோர்வரி தாநிகழ்

நின்றுதி யோதவி டுத்ததெனோ?

செம்பது மப்பிர மாவின்

தாம்ஒரு சென்னியி லேற்றயில்வாய்

நம்பவ லாருண ரும்புகழ்

மாதையின் நடுத்திகழ் நாயகனே! 60

உன்னடி யாரடி யரடியர்

உளோர்சி றிதெய தினுமீண்

டென்னத வர்வெனும் வேலை

வடிந்திடு மீகுகொள் வேனலவோ

கன்னல வரிச்சிலை யானுரு

வைப்பொடி கண்டவ னேகயிலை

மன்னவ னேவளம் நீடுறு

மாதையில் வாழும யேசுரனே! 61

குற்றமில் மெய்யருள் உற்றவல்

லோர்கள்கு றித்தும்வெ றுத்திலதாங்

கொற்றம னேகம் விழைந்தெனொர்

சிந்தை குலைந திமொற்றியே

நற்றவம் முற்றிய போதுவ

ரந்தரு நாயக மாமிறைவா!

புற்றர வம்புனை வாய்தனி

மாதைபு ரந்தபு ராதனனே! 62

எத்தனை யோதின மாகவொ

ரெண்ணமெ ணித்தொழு தேங்குமெனக்கு

அத்தனை யிற்சிறி தேனும்நல்

காமல்அ நீதிசெ யத்தகுமோ?

சித்தனை யொத்தொரு சங்கமன்

முன்புதி கழ்ந்தருள் கூர்சிவனே

வித்தனை யாய்!வியன் மாதையில்

னாளும்வி னோதம்வி ளைப்பவனே! 63

ஆடல னந்தம்வி ளைத்திடு

நீயுன ருட்செய லேகருதிப்

பாடல்ப கர்ந்திடு நானுயு

மாறுபு ரிந்தரு ளற்கிசைவாய்

ஆடலர் கொன்றைம லர்த்தொடை

தன்னொபெ ருக்கல ரும்புனைவாய்

கோடலில் சீர்திகழ் மாதையில்

நின்றுகு லாவுகு ணக்கடலே! 64

குஞ்சர மும்புலி யும்பல

சென்னிகொள் கோளரி யுங்கொலுநீ

வஞ்சவி னைப்பிணி மூன்றுமொ

ழித்தெனை வாழ்வுற வைத்திலையே!

தஞ்சமெ னத்தொழு வார்உள்உ

றுஞ்சிவ சங்கர னே! தகைசால்

அஞ்சமி குமயம னத்தனி

மாதையின் ஆலயம் மேயவனே. 65

ஆறுநெ றிக்குமொ_ரேபொது

வாமுனை யன்றியொர் தேவுளதென்று

ஊறுவ குத்தயர் வாரொடு

நானுமு ருததுழ லாதருள்வாய்;

ஏறுவ ரைந்தகொ டிப்பல

விழாநல மெய்திய மாதையிலோர்

கூறுடை யாளொடு வாழ்சிவ

னே! வெகு கோலம் டுப்பவனே! 66

உன்னது கோலமெ னப்பல

நூல்களு ரைத்தன அன்றியுமற்று

என்னது நெஞ்சறி யச்சில

வேடமெ டுத்தும் இல்லைகொலோ?

வன்னமொ ரைந்துடை யாய்!பல

கோடிம காரத பூதர்கள்சூழ்

முன்னவ னேமுது மாதைந

கர்க்கண்மு ளைத்தெழும் மொய்ம்பின்னே!

கைப்புறு பாடன்மொ ழிந்தசி

லோர்கள்க ளிக்கடல் எய்தியவாறு

இப்புவி [illegible] வினாவியென்

நெஞ்சமி டைந்திடல் ஓர்கிலையோ?

மைப்புயல் போலோளிர் மாயன்ம

லர்க்கண்வ ணைந்தப தத்திறைவா!

முப்புரர் [illegible] தவமா

தையின் முந்திமு ளைத்தவனே! 68

பல்கரு வித்திரள் கொண்டுசெய்

நின்னது பான்மையு ணர்ந்திலர்போன்

ஒல்கவி முத்தனை யென்றென்ம

னுந்துளு வப்புறு மாறருள்வாய்?

நல்கவ லாருளு யர்ச்சிபொ

றுத்துந் ரைத்தவி டைப்பரிமேற்

செல்கரு ணாகர னேயெழின்

மாதைசெ யம்பெற நீமனனே. 69

அற்ப மனத்தினர் மீதுமள்

பயில்வா வுறுபுன்மையினேன்

இற்பர வும்பெரி யோரொடு

கூடிநி லாவுவ தெத்தினமோ?

பற்பம ணிந்தவிர் செம்பவ

ளக்கிரி பாதிப சந்ததுநேர்

பொற்பவ னேபுய லோவரு

மாதைபு ரந்தவிர் புண்ணியனே! 70

சந்தந யந்தெரி யாதுவெ

றுங்கவி சாற்றிய நாவலர்தாம்

முந்தஅ டைந்துள் வீறும்இ

நாளெனை மொய்க்கவ மைக்கிலையே

நந்தசை யுஞ்செவி பத்துடை

யாய்பர ஞானிகள் தம்மிறைவா!

அந்தண்வ யற்றிரு மாதைந

கர்க்கண்அ மர்ந்த வந்தானே! 71

நெஞ்சமி யைந்தில தாம்வினை

யுஞ்சில நிகழவி யக்குவதாம்

வஞ்சமொ ழிந்துன ருட்டுளி

பெய்தும கிழ்ச்சியு றப்புரிவாய்

அஞ்சல ளித்திமை யார்களை

ஆளும் அகோர் செயச்சரபா!

மஞ்சடர் சோலைநி லாவிய

மாதைவி எம்பதி வாழ்பரனே! 72

ஐயமு றாமலு னாதரு

ளேதுணை ஆம்என நம்புமெனை

பொய்யர்செல் புன்னெறி யிற்செல

வுய்ப்பது புண்ணிய மோபுகலாய்;

மையணி கண்டம யேசுர

னே! வள மாதையி னிற்றினம்வாழ்

செய்யவே னே!சிவ லோகமு

கப்புறு சிந்துர மாவலனே! 73

யாரெங் எண்ணினும் மங்ஙன

மேநிக ழீடுறு நின்னருளின்

சீரொளி யேனுண ரத்தகு

மோமுதிர் சீலம் மைத்தருள்வாய்;

ஓரெழு மாமுனி வோர்தொழு

நாளில்உ டுப்பதம் ஈந்தருள்வாய்!

பேரெம னாடரி தாவள

மாதைபு ரந்தவி பூதியனே! 74

என்மன மேயெனை நக்கிகழ்

தீமையெ னைக்கொடி யற்றலொழித்து

உன்மகி மைக்கிசை வாகிய

நன்மையு ஞற்றிவு யத்தருவாய்

பன்மறை மூலணர்ந் தமை

யோகப ரம்பரை யோர்குரவா!

தன்மமெ லாமிகு மாதைவ

ளம்பதி தாங்கிய தற்பரனே! 75

**அறுசீர் விருத்தம்:**

வேடிக்கை யுடனுடற் போகமுங்

கருதியே மெலிகின்ற வீணனேன்வாய்

பாடிப்ப ராவுகவி அணிகுவா

யோஅலது பாழ்படும் படிசெய்வாயோ?

நாடித்தொ ழும்புனிதர் வேண்டியப

டிக்குபரம் நல்கிடக் கலியாதவா!

ஆடிக்க லாமயில் அகவியவ

ளம்பொலியும் ஆமாதை அழகேசனே! 76

அஞ்சனக் கண்ணியர்கண் மோகாந்த

காரத்த கப்பட்டு னருள்விளக்கங்

கொஞ்சமும்இ லாவரெ னத்தளர்ந்

தேஅடியர் கூட்டத்தின் நடுவாழ்வனோ?

செஞ்சரண் டொழுமொருவ னுய்யநமன்

ஆகஞ்செ குத்தாய்தி ரைத்தடங்கைக்

கஞ்சமலர் வாவிபல சூழ்மாதை

நகரிற்கு வன்றரும காதேவனே! 77

காரணமெ னாவுனது சேய்சொன்ன

வார்த்தையைக் கருதியத னாற்களித்து

நாரணன் றொழில்சிறிது செயமுயன்

றேனென்னை நலிவுறவி டுத்திடாதே

வாரணமு ரித்ததள்பு னைந்தபுகழ்

கூறுமவர் மனமேலிவு தீர்க்குமிறைவா

வாரணமு ழங்குமா மாதைநகர்

வாசனே அபிராம பரமேசனே! 78

பேராசை யென்னும்பி ணிப்பட்டு
வாடும்பெ ரும்பாவ நீங்கநானின்
ஆராத னஞ்செய்திடுந் தோறும்விக்
கினம்அனந் தம்வரு விப்பதாரோ
காரார் கனத்தெம் பிரானே
கறுக்குங் களத்தா யேகனற்கட
சீராள னேமாதை நகராதி
பாவுள்ள தெய்வமுழு தாகுவானே! 79

நித்தத்து வம்பெற்று மலைதோறும்
மாயாது நெடுநாள்வ சிப்போர்களாஞ்
சித்தர்க்கு மிந்நாளிவு லகம்படும்
பாடுசிறி துந்துலங் காததேன்
அத்தத்தின் மழுமான ணிந்தீடில்
விடையேறி ஆகாய வழியேகுவாய்
முத்தர்க்கொ ரரசாகி யர்மாதை
நகர்மேவு முக்கட்பெ ருந்தேவனே! 80

கொசுகென்று நிகழ்புன்ற கைக்கயவர்
அதியாண்மை கொண்டுலவு கொடுமைதீர
முசுகுந்த னேபோலு மன்னொருவன்
வந்திந்த மூதுலகி லொளிர்வருள்வாய்
வசுவென்ற தேவருது துயர்முழுதும்
மாறியுள வாறுகளி கூடவைத்தாய்
பசுவென்ற குலமுழுது முவகையுறு
மாதைப்ப திக்குள்வளர் பரமசிவனே! 81

கஞ்சத்தி ருக்குமய னென்னைப்ப
டைத்துட்க லங்கிடும் படிவித்தான்
வஞ்சக்கு ணக்கயவர் தம்மைவென்
றளிகூரும் வாழ்கையுறு மாறருள் செய்வாய்
நஞ்சத்த னைக்குமொரு நாசமற்
றுறவேந டுக்களத் திடமமைத்தாய்
செஞ்சத்தி வேலற்கு தவியவனே!
ஆமாந்த செயமுறவ ளர்ந்தசிவனே! 82

என்னிச்சை முற்றுதற் காகியத

வஞ்செய்யும் மீடிலே னீநல்கிலாய்

நின்னிட்ட மொருசிறிதென் மேல்வைத்தென்

னுடனுலகு நீடுநல மெய்தருள்வாய்

கன்னிக்கி ளிப்பிள்ளை யனையமுத்

தாம்பிகை கவின்றரு மிடப்பாலுளாய்

நன்னிலத் திற்சிவிகை யோனும்ப

ணிந்துதுதி நவின்மாதை நகர்நாதனே! 83

என்னனைய புலவர்களு மென்னுடன்

றுணைவரா தேதோவெ வேறுவழிபோய்ப்

பொன்னருமை யெண்ணிப்பு லர்ந்துளார்

உன்னைப்பு கழ்ந்தபயன் யாதுமிலையோ?

தென்னனது கைப்பிரம் படியால்நி

றைந்தமைதெ ரித்தசிவ னேசிரிப்பால்

ஒன்னலர் புரஞ்செகுத் தாய்மாதை

நகரிடையொ ரெள்ளிழையோ டுறைகுவானே! 84

உமைகொண்க னாதன்முத லாயநின்

புகழ்சிறிது முள்ளத்தெ ழுந்தபற்பல்

சிமையங்க ளனையபே ராசையும்

பாடிடுஞ் சிறியனேற் கருள்செய்வாயோ

சமையொன்று முனிவோர்கள் சிந்தைக்கண்

ஊறியக ளிப்பிற்க வின்றபரமா

அமையொண்க ரும்பொடும யங்குமெழின்

மாதைநக ராண்டநா யகமூர்த்தியே! 85

ஆனையனை யர்களுஞ் சீயமனை

யார்களு மடற்சரப மனையார்களும்

பூனையனை யார்களுக் கஞ்சிப்ப

துங்கிய்யர் பொல்லாங்கு தொலைவதென்றோ

மேனைமக ளார்வலமி ருந்தமண

வாளனே வெற்பாய வில்வளைத்தாய்

மானையனை யார்கள்விளை யாடுமெழில்

மாறாத மாதைநகர் வாழ்வள்ளலே! 86

இல்லாத ஞாயங்க ளைப்பெரிது
கற்பித்தி யம்பபுன் புலவரென்னப்
பொல்லாங்கு துய்த்துப்பு ழுங்காமல்
உன்னருட் போதமொரு சிறிதருள் செய்வாய்
கல்லால் நீழலுட் கலைவலார்
நால்வர்தங் கண்காண வந்தகுரவா
மல்லாரு மாமதை நகர்வாச
னேயெங்கு மருவுசிற் பிரகாசனே! 87

ஈனக்கொ டுங்கயவர் புன்குடைநி
ழற்கீழி டைந்துழல்பெ ரும்பூமியின்
மானத்தொ ரணுவளவு மாயனைத்
தொடராத வன்பிழையி தென்கொலறியேன்
ஏனத்து டன்சென்று மின்றொருதொ
ழும்பறுக் கினியகணை யதவுமிறைவா
ஞானக்கு ருக்களென வாமாதை
நகர்த்தின் நடுவென்றும் வளர்நம்பனே! 88

மாலிருந் தென்னவன் வைத்தவை

யம்படைகள் துவலியருந் தென்னமனைமார்

காலிகொண் றுண்பவர் வசப்பட்டு

நோந்துயர்க ணிப்பரிய தாயதந்தோ

வேலிலங் குங்கையுறு புதல்வனைவி

டுத்தளவில் விறலணவுர் குடிகெடுத்தாய்

நாலிரண் டாநிலவு மூர்த்திகளு

மாய்வதை நகர்நடுவும் வளரீசனே! 89

இக்கலியு கப்புருடன் அடுநடுங்

குந்தவமி யற்றியுனை யினிதுநாடுந்

தக்கமுனி வோர்பெருஞ் சபையினொரு

சாருறுந் தகையெனக் கருள்வாய்கொலோ?

முக்கணுடை யார்களிற் றலையாய

கடவுளே மூவாமு தற்காரணா

தெக்கணமு கக்குரவ னாவுற்ற

மாதை சீர்பெறப் பரிசித்தனே! 90

கண்டாந் கைக்திகழ்ந் தஞ்சாது

நேரினிற் காறியுமி ழத்தவித்துத்

திண்டாடு மென்னனைய ருக்குங்கு

ருத்துவச் சீரருள வல்லாய்கொலோ?

பண்டாசு ரற்றடிந் தாளையொரு

பால்வைத்த பரமாப ரந்தாமனால்

செண்டாயு தற்பயந் தாய்!மாதை

நகரில்வளர் சிவலிங்க மதுள்வாசனே! 91

திருவெணீ றிட்டார்த மைக்காணில்

நாந்தழுது திற்றியும்வெ றுத்திட்டதோர்

தருமசே னற்றடுத் தாண்டநீ

முழுதுமணி தருமெனைவி ரும்பாய்கொலோ?

குருமரபி னிற்றலைமை யுற்றசிவ

னேகருணை குன்றாத குணவாரியே

மருமலர்ப் பொழிவளையு மாதைநக

ராதிப மழவிடைப் பரிமன்னனே! 92

விடம்தனை யமுதாக்க வமுதமதை

விடமாக்க வேறுமிவை யனையவாய்

திடமனந் தஞ்செய்ய வல்லதுன

தருளெனத் தேறுமெனை யாளாங்கொலோ?

படவரவ கடிதடித் தார்பலர்ம

யங்குறப் பலியோடு பற்றிச்செல்வாய்!

அடன்மிகு மிராதவ னேகர்தொழ

மாதையினில் அமருமழ கியநாதனே! 93

ஊதாரி களிலுன்னை யனையரிலர்

என்னவே யுலகமுழு தோதலுண்டுண்டு

ஏதானம் வடலூரன் அளவிலதி

லோபியாய் ஈடில்வகை ஏற்றாய்கொலோ?

சீதார் விந்தத்தி ருக்குமிரு

மடவார்செ யும்பணியு மேற்றருள்செய்தாய்

சேதாம்ப லம்பொய்கை குலவுமெழின்

மாதைத்தி ருக்கோயில் வளர்தெய்வமே! 94

அன்றுவட லூரனுக் கநியாய

நனிசெய்து அளப்பில்வசை யீந்தெண்ணி

இன்றுவரை நோமெனக் கியாதுசெய்

வாயோவு னெண்ணமறி கில்லேனையோ

குன்றுதவு மகள்கொண் கனேயன்

டபகிரண்ட கோடிதொறு முலவுகுரவா

பொன்றுதலி லாதபரி பூரணசொ

ரூபனே புகழ்மாதை வளரீசனே! 95

வடலூர னன்பினிற் பெரியனே

யுருகாத வன்பினிற் பெரியனியானென்

னிடமேவு மிச்சையவ னாசையிற்

கோடிடங் கேற்றமெனை யென்செய்வையோ

கடநாக மொன்றுரித் துப்போர்

வையிட்டுக் கடும்பேய்க ளுடனாடினாய்

தடமாம திற்புனையு மாதைநக

ரிற்குடிகொள் சங்கரச தானந்தனே! 96

என்னைக்கொ டுத்துனடி யார்பதத்

துகள்சூ டுமீடுக ருதாவிடினுநான்

உன்னைத்து தித்ததன் கூலிசிறி

தானாலு முதவாதி ருக்கலாமோ

பொன்னைக்கு றித்தவர்க் குங்கருணை

செய்தவா! புள்ளிப்பு லிப்பசுந்தோல்

தன்னைப்பு னைந்தசி வனே!மா

தைநகர் மேயசருவ வல்லபநாதனே! 97

கொட்டுறமு முடிமன்னர் கோவகைத்

துண்டுடல்கொ முத்துலவு கின்றாகளால்

எட்டுணையு நின்னருட் செயல்பெற்று

ளோனொருவ னிகதலத் தில்லைகொல்லோ

மட்டுமலி கொன்றைச்ச டைத்தம்பிரானே!

மலைப்பா வைமருவு மார்பா!

விட்டுணுவ னேகர்தொழ வாமாதை

நகர்நடு விளங்கயி விழுச்சோதியே! 98

பூமியொடு வானுமமு மோசையறல்

நாடிப்பு முங்குமதி தந்தநீதான்

நமியுடை யான்கலை யிலொன்றுத

வொணாதோ முனெறிதவற லறிகிலாயோ

காமியமு முத்தியும் விரும்புமடி

யார்கண மிசைகருணை பொழிகின்றகாரே

மாமிசம ருந்துமவ ரறியாத

மகிமையுறு மாதைநகர் மேயவானே! 99

நாயுணவ ருந்துசிலர் தாமுமன

தருளான் முன்நாராயணன் கலைச்சீர்

மேயுலகி னுக்கிதமி யற்றுலுண்

டேலெனது வேட்கைவீ ணாகுங்கொல்லோ

பேயுடன் டித்தமையு ரைத்தார்க்கும்

வீடருள்பெ ரும்பிரா னேபிறந்து

மாயும்வினை யொன்றுமறி யானே!

நமர்மாதை வளநகரின் மாதேவனே! 100

**தெய்வமே துணை. முற்றிற்று**

# பின்னிணைப்பு-1
# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண்-பாடல் எண்)

அ

அக்கினி யனையா 45,

அங்கி யிற்றசை 23,

அஞ்சனக் கருங்கண் 33,

அஞ்சனக் கண்ணியர்கள் 77,

அந்தநா ளெனவை 37,

அற்ப மனத்தினர் 70,

அறங்களிற் பெரிதோ 48,

அன்று புக்கொளி 4,

அன்றுவட லூரனுக் 95

ஆ

ஆடவ னந்தம் 64,

ஆபிய மயிலோன் 40,

ஆறுநெ றிக்குமொ 66,

ஆனினம் வதைப்பா 42,

ஆணையனை யார்களுஞ் 86

இ

இக்கலியு கப்புருடன் 90,

இந்தநா ளிலென் 1,

இருவகைக் கனவிற் 31,

இல்லாத ஞாயங்க 87,

இவ்வுல கிந்தா 49,

இன்னலெத் தனையோ 27

ஈ

ஈனக்கொ டுங்கயவர் 88

உ

உமைகொண்க னாதன்மு 85,

உள்ளன வேடக 58,

உன்னை நம்பிய 17,

உன்னடி யாராடி 61,

உன்னது கோலமெ 67,

உன்னருள் பெற்றார் 47,

உன்னை எள்ளினும் 3

ஊ

ஊதாரி களிலுன்னை 94

எ

எண்ணிய வண்ணமெ 53,

எண்ணய வெண்ணப் 50,

எத்தனை யோதின 63,

என்னைக்கொ டுத்துனடி 97

என்னனைய புலவர்களு 84

என்பு பெண்ணுரு 11,

என்னிச்சை முற்றுதற் 83,

என்மன மேயெனை 75

ஏ

ஏட்டின்மை யிடற்குச் 36

ஐ

ஐங்க ரத்தனிக் 25, ஐயமு நாமலு 73

க

கஞ்சநாண் மலரிற் 26,

கஞ்சத்தி ருக்குமய 82,

கண்டார்ந கைத்திகழ்ந் 92,

கற்பக மேநிகர் 54,

கனலெதிர் பசுக்கொன் 41

கா

கார்கட லுண்டுவி 59,

காரணமெ னாவுனது 78,

கால முங்கொடுங் 13

கு

குஞ்சர கும்புலி 65,

கும்பமு னிக்கரு 60,

குற்றமில் மெய்யருள் 62

கெ

கெட்டுறமு முடிமன்னர் 98

கை

கைப்புறு பாடன் 68

கொ

கொசுகென்று நிகழ்புன்ற 81,

கொட்டுறமு முடிமன்னர் 98,

கொம்புடை யனவுங் 35

ச

சட்ட நான்மறை 24,

சடில் மட்டுள 15,

சந்தந யந்தெரி 71,

சூ

சூதைநி கர்த்த 52

செ

செங்கண்மு குந்தன் 55,

செங்கல் புனலென் 30,

சென்றுசென் றென்றந் 46

த

தவரும் வேதியர் 19

தி

திருவெணீ றிட்டார் 92

ந

நங்கைய ரிற்றலை 51

நா

நாயுணவ ருந்துசிலர் 100,

நானுளன எனக்கா 28

நி

நித்த மாந்துதி 5,

நித்தத்து வம்பெற்று 80

நெ

நெஞ்சமி யைந்தில 72

ப

பங்க யாதனப் 14,

பட்ட வச்த்தணர் 8,

பதுமநாண் மலரிற் 43,

பரவ சப்படு 18,

பல்கரு வித்திரள் 69

பா

பாடல்வல் லபத்துக் 38,

பால நாமழவா 16

பி

பிள்ளை வெள்ளன 12

பு

பிண்ணியம் வெறுத்துப் 29

பூ

பூதநா யகனென் 32,

பூமியொடு வானுமழு 99

பே

பேராசை யென்னும்பி 79

போ

போதக னுங்குரு 56

ம

மந்தரக் கிரிநேர் 44

மா

மாய வித்தையும் 9,

மாலிருந் தென்னவன் 89

மு

முதலை யுண்டசேய் 10

யா

யாரைர் எண்ணினும் 74

வ

வடலூர னன்பினிற் 94,

வண்ணவான் கவியுந் 39

வா

வானக முற்றவர் 57,

வான நாடரு 6

வி

விடம்தனை யமுதாக் 93

வெ

வெண்டகை பிறைக்கோ 34,

வெயில் நிலஎறித் 2

வே

வேட ருங்கடைக் 20,

வேத நூற்களுத்ம 22,

வேள்வி யிற்கொலை 21

## துணைநூற்பட்டியல்


1. தமிழ் இலக்கிய வரலாறு - மு. வரதராசன், பதிப்பகம், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி.

2. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வரலாறு - தவத்திரு. தி.செ. முருகதாச சுவாமிகள், 2-ம் பதிப்பு சிரவைக் கௌமாரசபை வெளியீடு 1998.

3. தமிழில் சதக இலக்கியம் - டாக்டர்.ச.சிவகாமி, உலகத் தமிழ்கல்வி இயக்கம், பெருங்குடி, சென்னை.

